சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.22.06.2026.
SC.NO.204/2019
PW9 : Lw-11 செல்வராஜ் (வயது 63 ) த/பெ.முத்துசாமி
(2,4,5 எதிரிகள் மட்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 06.09.2017 ஆம் தேதி நான் திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்துவிட்டு, காலை சுமார் 7 மணிக்கு நான், முதல் நிலை காவலர் 153 செல்வகுமார், முதல் நிலை காவலர் 1015 முத்துகிருஷ்ணன், முதல்நிலை காவலர் 425 சுதாகர், CIU தனி பிரிவு தலைமை காவலர் 2420 திருகுமார் ஆகியோருடன் சேர்ந்து ரைடிற்கு புறப்பட்டு நம்பர் 1 டோல்கேட், சமயபுரம் ஆகீய இடங்களில் கண்காணித்தும், பின்னர் கொணலை சென்று NSR Hotel முன்பு கண்காணித்தபோது, TN 27 U 1113 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் லாரியிலிருந்து TN 48 S 1764 மாருதி ஆம்னிவேனில் 5 நபர்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட வெளிமாநில மதுபானங்களை ஏற்றிக்கொண்டிருந்தபோது, போலிஸ் பார்ட்டியுடன் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முயன்றபோது, 2 நபர்கள் ஓடிவிட்டார்கள். பிடிப்பட்ட அண்ணாதுரை ,தர்மலிங்கம், ஆகிய இருவரும் மண்ணச்சநல்லுார், ராசாம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்றும் தப்பி ஓடிய மணிகண்டன் என்பவர் காட்டேரி பாளையம் என்று எனது விசாரணையில் தெரியவந்தது. தப்பி ஓடிய ஈச்சர் லாரி ஓட்டுநர் சிவகுமார் என்பவர் பாண்டிச்சேரியை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் விவரம் தெரியவில்லை. ஈச்சர் லாரியை சோதனை செய்தபோது, சுமார் 750 ML பிடிக்கக்கூடிய ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 12 பாட்டில்கள்கள் கொண்ட அட்டை பெட்டிகள் கொண்ட சுமார் 400 அட்டை பெட்டிகளும் மற்றும் Black Grapes என்று லேபிள் ஒட்டப்பட் அதே அளவுகொண்ட 10 அட்டைபெட்டிகளும் TN 48 S 1764 என்ற மாருதி ஆம்னிவேனில் Black Grapes என்று லேபிள் ஒட்டப்பட்ட 50 அட்டை பெட்டிகள் இருந்தன. அட்டை பெட்டியை திறந்து பார்த்தபோது, அட்டை பெட்டிகளில் இருந்த பாட்டில்களில் சீல் உடைக்கப்பட்டு இருந்தது.

பாட்டிலை திறந்து பார்க்கும் கொடிய நெடி உடைய வாசனை வீசியது, அதனை அருந்தினால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி உடனே காவல் ஆய்வாளருக்கு போன் மூலம் இது சம்மந்தமாக தகவல் தெரிவித்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் 8.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவ இடத்தில் இருந்த 3 நபர்களையும் 9 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, அவர்களிடம் தனி தனியாக ஒப்புதல் வாக்குமுலம் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக 1015 முத்து கிருஷ்ணன், முதல் நிலை காவலர் 153 செல்வகுமார் ஆகிய இருவரும் கையொப்பம் இட்டனர். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.15, அ.சா.ஆ.16,அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவது தான் அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். பின்னிட்டு எதிரிகள் பயன்படுத்திய ஈச்சர் வாகனத்தையும், மாருதி ஆம்னிவேனையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினர், அது முறையே அ.சா.ஆ.8,9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மகஜரில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்று ஞாபகம் இல்லை. சரக்குகளை மகஜரில் கைபற்றினார்கள். எதிரிகளை நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்து அவர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். மேற்படி காவல் ஆய்வாளர் நடவடிக்கைகளுக்கு நானும் மற்ற காவலர்களும் உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் காலை 7 மணிக்கு ரோந்திற்கு TVS டோல்கேட்டிலிருந்து புறப்பட்டோம். அன்றைய தினம் நான் முதல் விசாரணையில் சொன்ன இடத்திற்கு மட்டுமே ரோந்திற்கு சென்றோம். ரோந்திற்கு எங்களது இருசக்கர வாகனத்தில் சென்றோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண்ணும், குற்ற பிரிவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மதியம் 1.30 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்றார். நான் அன்றைய தினம் எந்த இடத்திற்கும் ரோந்திற்காக செல்லவில்லை என்றும் அதனால் தான் இடங்களை தவறாக கூறுகிறேன் என்றும் கூறினால் சரியல்ல.

கைது செய்ததாக சொல்லும் இடத்திலும் கைப்பற்றப்பட்டதாக கூறும் இடத்திலும் நான் இல்லை என்பதால் தான் அந்த விவரங்களை பற்றி முரண்பட்டு சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை

/signed/
செல்வராஜ்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana., B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி